**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.59/2025 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கருப்பன் செட்டி | த–பெ /க.பெ. | வைரவன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 76/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | -- | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.11.2025**

-----------------------------------------------------------------------------------------------------------

**20.11.2025**

**முதல் விசாரணை:**

**1)** நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

கடந்த 13.03.2024 ம் தேதியிட்ட புகார்தாரருக்கும் எதிரியின் கணவருக்கும் இடையே குடியிருப்பு வீட்டிற்கான **வாடகை ஒப்பந்தம் அசல் ம.சா.ஆ.1 ஆகும்**. கடந்த 24.06.2024 ம் தேதியிட்ட புகார்தாரருக்கும் எதிரியின் கணவருக்கும் இடையே **தொழில் நடத்துவதற்கான வாடகை ஒப்பந்தம் அசல் ம.சா.ஆ.2 ஆகும்**. 25.11.2024 ம் தேதியிட்ட ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி காரைக்குடி கிளை **காசோலை ( காசோலை எண் 167125) அசல் ம.சா.ஆ.3 ஆகும்.** கடந்த 27.11.2024 ல் ம.சா.ஆ.1 காசோலை போதிய தொகை இல்லை என்ற காரணம் கண்டு **திருப்பப்பட்ட ரிட்டன் மெமோ அசல் ம.சா.ஆ. 4 ஆகும்.** கடந்த 03.02.2025 ல் ம.சா.ஆ.1 காசோலை போதிய தொகை இல்லை என்ற காரணம் கண்டு **திருப்பப்பட்ட ரிட்டன் மெமோ அசல் ம.சா.ஆ. 5 ஆகும்.** கடந்த 14.02.2025 அன்று இது சம்பந்தமாக எதிரிக்கு அனுப்பப்பட்ட **சட்ட அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் ம.சா.ஆ.6 ஆகும்.** கடந்த 15.02.2025 அன்று சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான **அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் ம.சா.ஆ. 7 ஆகும்.** கடந்த 27.02.2025 எதிரியின் கணவருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு Addressee cannot be located என கண்டு திருப்பப்பட்ட **அஞ்சலக கவர் அசல் ம.சா.ஆ. 8 ஆகும்.** மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை – ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.11.20 18:07:59 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)